# ‘மக்களைத் தேடி மருத்துவம்’ மகத்தான திட்டத்தை உலக சுகாதார அமைப்பே புகழ்ந்துள்ளதை குறை சொல்பவர் படிக்க வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

அடுத்தப்படியாக நான் அதிகமாகக் கலந்து கொண்டது மக்கள் நல்வாழ்வுத் துறை நிகழ்ச்சிகள்தான். அந்த அளவிற்கு இன்றைக்கு இத்துறையில் பல முன்னேற்றங்களை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

எத்தகைய சூழலில் நாம் பொறுப்பேற்றோம் என்பது, உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். கொரோனா என்ற கொடிய தொற்று நோய், அந்த அலை தீவிரமாக இருந்த காலத்தில், ஆட்சிக்கு வந்தோம். ஆட்சிக்கு வந்தபிறகு அதனைக் கட்டுப்படுத்தினோம். அன்று நம்முடைய அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் எந்த அளவிற்கு பணியாற்றினார். அவர் மாரத்தான் வீரர் மட்டுமல்ல பணியாற்றுவதிலும் ஒரு மாரத்தான் வீரராக இருந்து பணியாற்றினார் என்பது உங்களுக்கு எல்லாம் நன்றாக தெரியும்.

நான் பலமுறை சொன்னது உண்டு. ஆட்சிக்கு வந்தபிறகு நான் முதலமைச்சர் மற்றவர்கள் எல்லாம் துறையின் அமைச்சர்களாக பொறுப்பேற்று இருந்தாலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் அமைச்சராக இருந்தவர் மா.சு. அவர்கள் தான். ஆனால் மா.சு. அவர்கள் மட்டுமல்ல, முதலமைச்சர் உட்பட எல்லா அமைச்சர்களும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக மாறினோம். அதனால் தான் கொரோனாவை கட்டுப்படுத்தும் முயற்சியிலே ஒரு பெரிய வெற்றியை பெற்றோம். அதற்கு நம்முடைய அதிகாரிகள் எந்த அளவிற்கு எல்லாம் துணை நின்றார்கள் இன்றைக்கும் நான் எண்ணிப் பார்க்கின்ற போது மகிழ்ச்சி அடைகிறேன்.

**நம் மாநிலத்தின் மருத்துவத் துறையின் சிறப்பு!**

இந்திய அளவில் பல்வேறு சுகாதார குறியீடுகளில் முதல் மூன்று மாநிலங்களின் வரிசையில் தமிழ்நாடு உள்ளது. இதை அவர் தெரிந்து கொள்ள வேண்டும். எவர் என்று உங்களுக்கு தெரியும். பொதுவாக ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கான குறியீடுகளில் ஒன்றாக மக்கள் நல்வாழ்வு விளங்கி வருவதுடன் தனிநபருக்கான சிகிச்சை செலவுகள் குறைவாக இருப்பதும் நம் மாநிலத்தின் மருத்துவத் துறையின் சிறப்பினை வெளிப்படுத்துகிறது.

அந்த அடிப்படையில் தான் 5.08.2021 அன்று “மக்களைத் தேடி மருத்துவம்” என்ற மகத்தான திட்டத்தைத் தொடங்கி வைத்தேன். தொடர்ந்து மாநிலம் முழுவதும் விரிவாக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 1 கோடியே 51 ஆயிரத்து 661 பயனாளிகளுக்கு முதன்முறை சேவைகளும், 3 கோடியே 4 லட்சத்து 71 ஆயிரத்து 896 நபர்களுக்கு தொடர் சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

நாட்டிற்கே முன்னோடியான இந்தத் திட்டத்தைப் புகழ்ந்து உலக சுகாதார அமைப்பே தனது வலைதளத்தில் ஒரு பாராட்டு கட்டுரை வெளியிட்டிருக்கிறது. அதாவது பயனாளிகளுக்கு அவர்கள் வீட்டை விட்டே வெளியே வரத் தேவையில்லாமல், மருத்துவப் பணியாளர்கள் பரிசோதனை மேற்கொள்வது, நோய்க் கண்டறிவது, சிகிச்சை தருவது, மருந்துகளைத் தருவது பற்றி எழுதப்பட்டுள்ளது. அதை தயவுசெய்து குறை சொல்கின்ற அவர் படித்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிலும் பெண் மருத்துவப் பணியாளர்கள் எப்படி இந்தத் திட்டத்தின் முதுகெலும்பாகச் செயல்படுகிறார்கள் என்பது பற்றியும் குறிப்பிட்டு காட்டியிருக்கிறார்கள். உலக அமைப்பே பாராட்டும் வகையில் நாம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம்.

**நம்மைக் காக்கும் - 48 திட்டம்!**

தமிழ்நாட்டி ன் மருத்துவக் கட்டமைப்பை அனைவரும் போற்றுகிறார்கள். நான் அண்மையில் ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக சென்றேன். அதைக்கூட இங்கே இருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர் எப்படி விமர்சித்தார் என்பது உங்களுக்கு தெரியும். முதலீட்டை ஈர்க்க போகவில்லை, முதலீடு செய்யப் போயிருக்கிறார் என்று சொல்கிறார் இது அவர் புத்தி. எனவே, அதைப்பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை.

**கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு மருத்துவமனை!**

‘இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் - 48’ திட்டத்தின்கீழ் சாலை விபத்துக்குள்ளானவர்கள் எந்த மாநிலத்தவர்களாக இருந்தாலும், தமிழ்நாடு மட்டுமல்ல எந்த மாநிலத்தவராக இருந்தாலும் 48 மணி நேரத்திற்குள் அவசர அறுவை சிகிச்சை இலவசமாக செய்யப்படும் ஒரு மாநிலம் இருக்கிறது என்றால் அது தமிழ்நாடு மட்டும்தான். 18.12.2021 முதல் 31.05.2023 வரை விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் 1 லட்சத்து 65 ஆயிரத்து 355 பேர் இந்தத் திட்டத்தின்கீழ் 145 கோடியே 27 லட்சம் ரூபாய் செலவில் சிகிச்சை பெற்று இன்னுயிர் மீட்கப்பட்டுள்ளனர்.

இங்கே நம்முடைய துறையினுடைய அமைச்சர் மா.சு. அவர்கள் சொன்னதைப் போல, சென்னையிலே, கிண்டி பகுதியிலே, கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி, கலைஞர் நூற்றாண்டு நினைவு பன்னோக்கு மருத்துவமனை மிகப் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ளது. அது வருகிற 15ஆம் தேதி அதனுடைய திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெறவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் நல்வாழ்வுத்துறையானது மாரத்தான் ஓட்டம் போல மிகப் பெரிய பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது.

கொரோனா அலையையும் எதிர்கொண்டு, மக்களைக் காத்து, மாநிலத்தின் மருத்துவக் கட்டமைப்பையும் வளர்த்தெடுத்தோம். இதற்குக் காரணமான அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியையும், வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதோடு, அத்தோடு அவருக்கு துணை நிற்கக்கூடிய அனைத்து அதிகாரிகளையும் பணியாளர்களையும் இந்த நேரத்தில் நான் பாராட்டுகிறேன்.

இந்த வரிசையில்தான் இன்னொரு மகத்தான திட்டமாக நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் திறக்கப்பட்டு இருக்கின்றன. இது தொடர்பான முறையான அறிவிப்பை, “கிராமப்புறங்களில் ஆரம்ப சுகாதார நிறுவனங்கள் அமைந்திருப்பதைப் போல நகர்ப்புறங்களில் நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அமைக்க இருக்கிறோம்” எனச் சட்டமன்றத்தில் நான் 110 விதியின் கீழ் அறிவித்தேன்.

708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள், 177 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் உள்ள மாநராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைத்திட உத்தரவிட்டேன்.

கடந்த 01.04.2022 அன்று டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களின் அழைப்பிற்கிணங்க அங்கு நகர்ப்புறங்களில் இயங்கி வரும் ‘மொகல்லா கிளினிக்’ எனப்படும் நகர்ப்புற நலவாழ்வு மையத்தை நான் பார்வையிட்டேன். நம்முடைய துறையினு டைய அமைச்சரும், அதிகாரிகளும் வந்தார்கள்.

அப்போது, ஏற்கனவே தமிழ்நாட்டில் கிராமப்புற சுகாதார நிலையங்களின் கட்டமைப்பை வலுப்படுத்தியுள்ள நாம், அதனை நகர்ப்புறங்களுக்கும் விரிவாக்கம் செய்ய வேண்டும் என நினைத்தோம். அந்த அடிப்படையில்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. இந்த 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்களின் உட்கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கான அனுமதி 2021- 22 ஆம் ஆண்டு 593 மையங்களுக்கும் 2022-23 ஆம் ஆண்டு 115 மையங்களுக்கும் அளிக்கப்பட்டது. இவற்றுக்கான கட்டடப்பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. இதில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் இன்றைய நாள் திறக்கப்பட்டு இருக்கின்றன. இதன் மொத்த மதிப்பு 125 கோடி ரூபாய்! இந்த மையங்களைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்களிலும் 66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 172 வகை முக்கியமான மருந்துகளும், 64 வகை அவசியமான ஆய்வக சேவைகளும் ஆண்டு முழுவதும் தங்குதடையின்றி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. “அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டம்” என்பது இந்தியாவுக்கே முன்னோடியான திட்டமாக அமையப் போகிறது என்பதில் சந்தேகமில்லை.

புதியதாக அமைக்கப்பட்டுள்ள இந்த நகர்ப்புற நலவாழ்வு மையங்களின் மூலம், நகர்ப்புற மக்களுக்கு, குறிப்பாக குடிசை வாழ் மற்றும் நலிந்த மக்களுக்கும் தரமான முறையில் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் துணை மையங்களாக செயல்படும்.

அனைத்து ஆரம்ப சுகாதார சேவைகளையும் மக்கள் எந்தவித பொருட்செலவின்றி அவர்களின் வசிப்பிடத்திற்கு பக்கத்திலேயே எளிதில் தடையின்றிப் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சுவர் இருந்தால்தான் சித்திரம் என்பதைப் போல மக்களது உடல்நலத்தில்தான் அனைத்தும் அடங்கி இருக்கிறது. அந்த உடல்நலத்தைப் பேணிக் காப்பதில் தமிழ்நாடு அரசு உறுதியாக இருக்கிறது. அதனால் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை ஏராளமாக அமல்படுத்துகிறோம். நல்வாழ்வுத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் தருகிறோம்.

மருத்துவம் நவீனமயமாக வேண்டும். புதிய நோய்களையும் எதிர்கொள்ளும் ஆற்றல் கொண்டவர்களாக நமது மருத்துவர்கள் செயல்பட வேண்டும். மருத்துவ ஆராய்ச்சிகள் நிறைய நடக்க வேண்டும். மருத்துவர்கள் மட்டுமல்ல, மருத்துவ வல்லுநர்களையும் உருவாக்க வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையங்கள் எப்படி ஏழை எளியோரின் நம்பிக்கையாக இருக்கிறதோ, அதை போலவே நகர்ப்புற நலவாழ்வு மையங்களும் செயல்பட வேண்டும்.

இன்று 500 மையங்கள் திறக்கப்பட்டு இருக்கின்றன. இது ஒவ்வொரு ஆண்டும் அதிகமாகிக் கொண்டே வரும் என்பதில் ஐயமில்லை. வாழ்விடத்துக்கு அருகிலேயே பள்ளிகள் இருப்பதைப் போல, அருகிலேயே மருத்துவமனைகள், நிரந்தர மருத்துவ மையங்கள் என்ற சூழலை நிச்சயமாக விரைவில் உருவாக்குவோம். அதை மக்களும் நன்கு பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே உங்கள் அத்தனை பேரையும் கேட்டு, இதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கக்கூடிய அமைச்சர் அவர்களுக்கும், துறையினுடைய அதிகாரிகளுக்கும் மீண்டும் ஒருமுறை எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

**இந்திய அளவில் பல்வேறு சுகாதார குறியீடுகளில் முதல் மூன்று மாநிலங்களின் வரிசையில் தமிழ்நாடு உள்ளது. இதை அவர் தெரிந்து கொள்ள வேண்டும். எவர் என்று உங்களுக்கு தெரியும். பொதுவாக ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கான குறியீடுகளில் ஒன்றாக மக்கள் நல்வாழ்வு விளங்கி வருவதுடன் தனிநபருக்கான சிகிச்சை செலவுகள் குறைவாக இருப்பதும் நம் மாநிலத்தின் மருத்துவத் துறையின் சிறப்பினை வெளிப்படுத்துகிறது.**

### அமைச்சர் மா.சு. மக்கள் நல்வாழ்வுத் துறையில் ஒரு மாரத்தான் வீரராகப் பணியாற்றுபவர்



**உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். கொரோனா என்ற கொடிய தொற்று நோய், அந்த அலை தீவிரமாக இருந்த காலத்தில், ஆட்சிக்கு வந்தோம். ஆட்சிக்கு வந்தபிறகு அதனைக் கட்டுப்படுத்தினோம். அன்று நம்முடைய அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் எந்த அளவிற்கு பணியாற்றினார். அவர் மாரத்தான் வீரர் மட்டுமல்ல பணியாற்றுவதிலும் ஒரு மாரத்தான் வீரராக இருந்து பணியாற்றினார் என்பது உங்களுக்கு எல்லாம் நன்றாக தெரியும்.**

**கொரோனா அலையையும் எதிர்கொண்டு, மக்களைக் காத்து, மாநிலத்தின் மருத்துவக் கட்டமைப்பையும் வளர்த்தெடுத்தோம். இதற்குக் காரணமான அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியையும், வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதோடு, அத்தோடு அவருக்கு துணை நிற்கக்கூடிய அனைத்து அதிகாரிகளையும் பணியாளர்களையும் இந்த நேரத்தில் நான் பாராட்டுகிறேன்.**

---

### பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# புற்று நோயினை கண்டறியும் ஸ்கேன் கருவி தொடக்கம்!

### மு.அப்பாவு - அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பங்கேற்பு!

*நெல்லை.ஜூன்.8-*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணையின்படி பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 12 கோடி மதிப்பில் புற்று நோயினை துல்லியமாகக் கண்டறியும் பரிசோதனை ஸ்கேன் இயந்திரத்தை தொடக்கி வைக்கும் நிகழ்வு மற்றும் பல்நோக்கு அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூபாயில் 23.75 கோடி மதிப்பில் அதிக தீவிர சிகிச்சை பிரிவு கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு நிகழ்வும் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்,*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மை செயலாளர் ககன்தீப் சிங்பேடி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.*

*இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று புற்று நோயினை துல்லியமாக கண்டறியும் பரிசோதனை ஸ்கேன் இயந்திரத்தை தொடங்கி வைத்து புதிய கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.*

*மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் ரேவதி பாலன் வரவேற்புரையாற்றினார்.*

*பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக நெல்லை மாவட்டத்திற்கு மருத்துவ வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. புற்று நோயினை துல்லியமாக கண்டறியும் பரிசோதனை மையம் சென்னை மற்றும் மதுரைக்கு அடுத்தபடியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஏழை.எளிய மக்களுக்காக அமையப் பெற்றுள்ளது. அனைத்துத் தரப்பு மக்களும் சமமான மருத்துவம் பெற வேண்டும்.ஏழை,எளிய மக்களுக்கும் உயர் சிகிச்சை கிடைக்க வேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கமாகும்.*

*இந்த ஆண்டு பட்ஜெட்டில் 110 அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது. அதில் 10 அறிவிப்புகள் நெல்லை மாவட்டத்திற்கு ஆனது.நரம்பியல் அறுவை சிகிச்சை ரூபாய் 80 லட்சத்தில் உபகரணங்கள் நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வழங்கப்பட்டுள்ளன. தனியார் மருத்துவ மனைகள் போன்று அரசு மருத்துவமனைகளிலும் ‘பே’ வார்டு திட்டம் சேலம், மதுரையில் திறக்கப் பட்டுள்ளது.கோவையில் இன்னும் சில தினங்களில் துவங்கப்பட உள்ளது.நெல்லையிலும் விரைவில் திட்டம் கொண்டுவரப்படும்.இதில் ஏசி நவீன படுக்கை வசதியுடன் பணம் செலுத்தி சிகிச்சை பெறலாம்.*

*கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒன்றிய அரசின் சார்பில் அதிகாரிகள் ஆய்வு செய்து கண்காணிப்பு கேமரா, பயோமெட்ரிக் சிஸ்டம் சரி இல்லை. என்று கூறி மூன்று அரசு மருத்துவக் கல்லூரியின் அங்கீகாரத்தை ஏன் ரத்து செய்யக்கூடாது என்று கடிதம் அனுப்பினர்.அதற்கு பதில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. அரசு மருத்துவக் கல்லூரிகளில் இதுபோன்ற சிறு சிறு குறைகளுக்கு ஒன்றிய அரசு அறிக்கை தரக்கூடாது என்பதை வலியுறுத்த ஒன்றிய அமைச்சரை விரைவில் சந்தித்து பேச உள்ளோம்.*

*நெல்லை அரசு மருத்துவமனையில் இதயம்,நரம்பு,சிறுநீரகம்,கல்லீரல், போன்ற சிகிச்சை அளிக்க ஒன்றிய அரசு, மாநில அரசு நிதி உதவியுடன் ரூபாய் 72.10 கோடியில் 2 லட்சம் சதுர அடியில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.நெல்லை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இது போன்ற வசதிகள் வருவதால் தென் மாவட்ட மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.பல் மருத்துவ கல்லூரியில் நெல்லையில் அமைக்க வேண்டும் என பேரவை தலைவர் கேட்டுக் கொண்டார். அரசு பல் மருத்துவக் கல்லூரி தமிழகத்தில் சென்னையில் மட்டுமே உள்ளது.70 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது புதுக்கோட்டையில் திறக்கப்படவுள்ளது.*

*மேலும் செவிலியர் பயிற்சி கல்லூரிக்கு 100 மாணவர்கள் வீதம் 11 செவிலியர் பயிற்சி கல்லூரி திறக்க ஒன்றிய அரசு அனுமதி வழங்கியுள்ளது.நெல்லை மருத்துவ கல்லூரியிலும் வள்ளியூரிலும் செவிலியர் பயிற்சி கல்லூரி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

*ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசின் கல்வித் துறையின் சார்பாக இந்திய அளவில் அனைத்து துறை கல்வி நிறுவனங்களுக்கும் பல்வேறு தரவுகளின் அடிப்படையில் 176 கல்லூரிகள் ஆய்வு செய்யப்பட்டது,36 மாநில அரசு மருத்துவக் கல்லூரிகள் இடம் பெற்றன.இதில் தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டது.இந்த ஆண்டு 2023 சென்னை மருத்துவக் கல்லூரி ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை அகில இந்திய அளவில் 11ஆம் இடத்தை பிடித்துள்ளது.கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து சென்னை மருத்துவக் கல்லூரி தரவரிசையில் முன்னேறி வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது (2021 ஆம் ஆண்டு 16 ஆம் இடம் 2022 ஆம் ஆண்டு 12ஆம் இடம் 2023 ஆம் ஆண்டு 11ஆம் இடம்) இப்படி முன்னேறியுள்ளது.*

*இந்திய அளவில் மாநில அரசுகளால் நடத்தப்படும் அரசு மருத்துவக் கல்லூரியில் சென்னை அரசு மருத்துவக் கல்லூரி முதலிடம் பெற்றுள்ளது.என்பது குறிப்பிடத்தக்கது.*

*இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் பேசினார்.*

*நிகழ்வில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா. ஞானதிரவியம் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல் வகாப் (பாளையங்கோட்டை) நயினார் நாகேந்திரன் (நெல்லை) மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன்,மாநகராட்சி ஆணையாளர் சிவகிருஷ்ணமூர்த்தி, துணை மேயர் கே.ஆர்.ராஜு,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, மாவட்ட துணை செயலாளர்கள் எஸ்.வி.சுரேஷ், தர்மன், மீனவர் அணி துணை செயலாளர் எரிக்ஜுடு, பொதுக் குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன், ஒன்றிய செயலாளர்கள் அருள்மணி, ஜோசப் பெல்சி உள்பட அரசு அலுவலர்கள், செவிலியர்கள், பொதுமக்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.*

*நிகழ்ச்சியின் நிறைவில் சுகாதாரப் பணி துணை இயக்குனர் ராஜேந்திரன் நன்றி உரையாற்றினார்.*



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி நெல்லையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் புறவழிச்சாலை பணிமனையில் ஓய்வு பெற்ற அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்கள், வாரிசுதாரர்களுக்கு பணப்பலன்கள் வழங்கும் விழா,பணியாளருக்கான குளிரூட்டப்பட்ட ஓய்வறை திறப்பு விழா நிகழ்வு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன் முன்னிலையில் நடைபெற்றது.போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பங்கேற்று 340 பணியாளர்களுக்கு 111.95 கோடி பணப்பலன்களை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல்வஹாப், நயினார் நாகேந்திரன், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,மேயர் சரவணன்,துணை மேயர் ராஜ், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ், நெல்லை அரசு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குனர் மோகன் உட்பட பலர் உள்ளனர்.

---

### பொ.சிவபத்மநாதன் தலைமையில்

# கடையத்தில் பொதுக்கூட்டம் : கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

### சா.ஞானதிரவியம் எம்.பி. - தனுஷ் எம்.குமார் எம்.பி. பங்கேற்பு!

*தென்காசி.ஜூன், 8-*

*கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாளை (0906 2023 வெள்ளிக்கிழமை)மாலை 6 மணி அளவில் கடையம் பத்திரப் பதிவு அலுவலகம் முன்பு மாபெரும் பொதுக்கூட்டம் தென்காசி தெற்கு மாவட்டச் செயலாளர் பொ.சிவபத்மநாதன் தலைமையில் மாவட்ட அவை தலைவர் சுந்தர மகாலிங்கம்,துணை செயலாளர்கள் தமிழ்ச்செல்வன், கென்னடி,கனிமொழி, மாவட்ட பொருளாளர் ஷெரிப் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.*

*கடையம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார் வரவேற்புரையாற்றுகிறார் வடக்கு ஒன்றிய செயலாளர் மகேஷ் மாயவன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.*

*இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று சிறப்புரை ஆற்றுகிறார்.*

*நிகழ்வில் சா.ஞான திரவியம் எம்.பி. (நெல்லை) தனுஷ் எம் குமார் எம்.பி. (தென்காசி) மாநில விவசாய அணி இணைச் செயலாளர் அப்துல்காதர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்துப்பாண்டி, ஷேக் தாவுது,சேசு ராஜன்,ஆறுமுகசாமி,மா.செல்லத்துரை, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள்*

*அருள்,ரஹீம்,ராஜேஸ்வரன்,சமுத்திர பாண்டியன்,கதிர்வேல் முருகன், சாமிதுரை, தமிழ்ச்செல்வி,ஒன்றிய செயலாளர்கள் மாரிவண்ணமுத்து, செல்லத்துரை, சீனித்துரை,அன்பழகன், சிவன் பாண்டியன், அழகுசுந்தரம், ரவிசங்கர், திவான்ஒலி, சுரேஷ், நகர செயலாளர்கள் சாதிர்,ஜெயபாலன், வெங்கடேசன், அப்பாஸ்,உள்பட பேரூர் கழக செயலாளர்கள்,ஊரக,உள்ளாட்சி குழு தலைவர்கள்,பேரூராட்சி மன்ற தலைவர்கள்,மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், துணை நிர்வாகிகள், கடையம் தெற்கு,வடக்கு,ஒன்றிய கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.*

*நிகழ்ச்சி நிறைவில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ரவிச்சந்திரன் நன்றி உரையாற்றுகிறார்.*

---

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

# சேலம் மத்திய மாவட்டம் சார்பில் சிறப்பான வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

*சேலம், ஜூன் 8-*

*சேலம்மத்தியமாவட்டச் செயலாளர்இரா.இராஜேந்திரன்எம்.எல்.ஏ.விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*14 வயதில் கோபாலபுரத்தில் இளைஞர் தி.மு.க.வை ஆரம்பித்து மக்கள் பணியாற்ற தொடங்கிய கழக தலைவர் அவர்கள், கடந்த ஐம்பது ஆண்டு காலத்தில் தமிழகத்தில் அவர் கால்படாத கிராமம் இல்லை, பயணம் செய்யாத நகரம் இல்லை, என பட்டி தொட்டிகளில்எல்லாம்இந்தஅரை நூற்றாண்டுகாலத்தைதமிழ்நாட்டு மக்களோடு கழித்த தலைவர், மக்களின் சுக துக்கங்களில்பங்கெடுத்ததலைவர், தமிழ்நாட்டின் எந்த பகுதி மக்களுக்கும் எவ்வித பாதிப்புஏற்பட்டாலும்முதலில் நீளும் உதவி கரம் தலைவர்அவர்களின்கரம்என்கிற அளவிற்கு அரை நூற்றாண்டுகாலம்தமிழ்நாட்டு மக்களுக்கு உழைத்த தலைவர்- தொடர்ந்துஉழைத்துக் கொண்டிருக்கும் தலைவர் அவர்தான் நம் தமிழ்நாட்டின் முதலமைச்சர்; நம் உயிரனைய தலைவர் அவர்கள்.*

*இவ்வாறு எண்ணற்ற சிறப்புகளை பெற்ற ஓய்வறியா உழைப்பாளி - திராவிட மாடல் ஆட்சியின் நல்லாட்சிநாயகன்நம்தலைவர் ஜூன் 11 மற்றும் 12 ம் தேதிகளில் சேலம் வருகை தந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்கள்.*

*ஜூன்11ஆம்நாள்மற்றும் ஜூன் 12ஆம் நாள் இந்த இரண்டு நாள் நிகழ்ச்சிகளிலும் “படை பெருத்ததால் பார் சிறுத்ததோ” என மாற்றார் வியக்கும் வண்ணம் பொதுமக்களும்கழகநிர்வாகிகளும்,கழகதோழர்களும் அலை கடலென ஆர்ப்பரித்து கலந்து கொள்கின்றார்கள்.*

*கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், இளைஞர், மகளிர், மாணவர் அணியினர் என அனைத்து அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் “கண்துஞ்சாது பசி நோக்காது” கழக தலைவரை வரவேற்பது, அனைத்து நிகழ்ச்சிகளிலும் அனைவரையும் பங்கேற்க செய்வது என அனைத்து ஏற்பாடுகளையும்செய்திடவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு இரா.இராஜேந்திரன்எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*